## மகளிர் தினத்தையொட்டி

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்!

## 550 பேர் பயனடைந்தனர்!!

சென்னை, மார்ச். 09–

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்களில் மொத்தம் 550 பேர் பயனடைந்தனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்புடன் இணைந்து மெட்ரோ ரெயில் பயணிகள் பொதுமக்கள் மற்றும் மகளிர் நலனுக்காக இலவச பொது சுகாதாரமருத்துவமுகாம்மெட்ரோரெயில்நிலையங்களில்நடத்தியது.

இந்த இலவசபொதுசுகாதாரமருத்துவமுகாம்வடபழனி, செனாய் நகர்மெட்ரோ, விமானநிலையமெட்ரோமற்றும்சென்ட்ரல்மெட்ரோ ஆகிய 4 மெட்ரோ ரெயில் நிலையங்களில் காலை 9 மணி முதல் 12 மணிவரையும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரையும் நடைபெற்றன. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள், மகளிர் மற்றும் மெட்ரோ ரெயில் ஊழியர்கள் காலையில் 280 பேரும் மாலையில் 270 பேர் உட்பட சுமார் 550 பேர் இந்த முகாமில் பயனடைந்தனர். சீரற்ற ரத்த சர்க்கரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.